රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව
அரச கணக்குகள் திணைக்களம்
Department of State Accounts

මගේ අංකය / எனது இல. / My No. SA/MAA/02/01/03  ඔබේ අංකය / உமது இல. / Your No.  දිනය / திகதி / Date 2024.11.20

**அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் : 05/2024**

**அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இல் பகுதி II இல் 09 ஆம் பந்தியில் உள்ளடங்கியுள்ளபடி நி.ஒ. 429 இன் கீழ் 2024 ஆம் ஆண்டுக்காக திறைசேரி கணக்குப் புத்தகங்களை மூடுதல் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல்**

2024 ஆம் ஆண்டின் 44ஆம் இலக்கப் பொது நிதி முகாமைத்துவச்சட்டத்தின் பிரிவு 47(2) இன் படி வரவு செலவுத் திட்ட நிறுவனங்கள் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்களை முறையாக வடிவமைக்கப்பட்ட குறித்த எழுத்திலான சட்டத்திட்டங்களுக்கு அமைய தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம், அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்கள் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து மூன்று (03) மாதங்களைத் தாண்ட முன்னர் திறைசேரியின் செயலாளரினால் கணக்காய்வுக்காக கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு அதில் உள்ளடங்கியுள்ள சகல செலவினத் தலைப்புகளுக்காகவும் தயாரிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இந்தப் பணிக்காக தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவில் விதிக்கப்பட்டுள்ளவாறு வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் நிதியங்கள் ஒதுக்கப்படுகின்ற சகல செலவினத் தலைப்புகளும் தமது (வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்குரிய கணக்குகள் உட்பட) வருடாந்த நிதிக் கூற்றுக்களை கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இதன்போது கணக்காய்வுக்காக போதுமானளவு காலத்தை வழங்கக்கூடிய விதத்தில் தொடர்புடைய நிதிக் கூற்றுக்களை உரிய கால எல்லைக்குள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும். அதனால் சகல செலவினத் தலைப்புகளினதும் 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களை 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கக்கூடிய விதத்தில் 2024 ஆம் நிதியாண்டுக்கான பின்வரும் கணக்குகளை மூடும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மேலும், நிதி ஒழுங்குவிதிகள் 150 இன் பிரகாரம், திரண்ட நிதியத்தின் மூலம் செலவினங்களை மேற்கொள்கின்ற நிறுவனங்கள் அந்த நிதி ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளையும் உள்ளடக்கக்கூடிய விதத்தில் நிதிக் கூற்றுத் தொகுதியைத் தயாரித்தல் வேண்டும். அவ்வாறு நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குரிய அறிவுரைகளும் மாதிரிப் படிவமும் இந்தத் திணைக்களத்தினால் பின்னர் வெளியடப்படும்.

ஒதுக்கீட்டுச்சட்டத்தின் படி 29.12.2023 திகதியிடப்பட்ட அரச வரவு செலவு சுற்றறிக்கை இல 05/2023 இன் பந்தி இல 4 இற்கு இணங்க மாகாண சபைகள் தனியான செலவு அலகுகளாக அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் மாகாண தலைமைச் செயலாளர்கள் வரவு செலவு விடயங்களுக்காக தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

මහා භාණ්ඩාගාරය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව  பொது திறைசேரி, கொழும்பு 01, இலங்கை.  General Treasury, Colombo 01, Sri Lanka.
General-Tel.: +94 11 2484500/600  Ext.: 1149  Fax: +94 11 2484869  Website: www.sad.gov.lk
Director General - Tel.: +94 11 2484728  Fax: +94 11 2473856  e-mail: dgsa@sad.treasury.gov.lk

அதற்கிணங்க் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட கட்டுநிதி கணக்குகளின் கீழ் திறைசேரியால் ஒதுக்கிடப்படும் நிதிகளுக்கும் இந்த வழிகாட்டுதலின் ஏற்பாடுகள் பொருந்தும்.

2. நிதி ஒழுங்குவிதிகள் 429 இன் பிரகாரம், 2024 ஆம் நிதியாண்டின் கணக்குப் புத்தகங்களை 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மூட வேண்டிய அதேவேளையில், தொடர்புடைய ஆண்டுக்குரிய கணக்குச் சுருக்கங்கள், மாற்றல் கட்டளைகள் மற்றும் ஏனைய கணக்கு அறிக்கைகள் என்பவற்றைச் சரியாகவும் முறையாகவும் இந்த வழிகாட்டியின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது

3. பொது விடயங்கள்

3.1 அரச கணக்குகள் திணைக்களத்தின் https://newcigas.treasury.gov.lk இணையத் தளப் பக்கத்தில் உட்செலுத்தப்பட்டுள்ள தங்களது அமைச்சின்/ திணைக்களத்தின்/ மாவட்டச் செயலகத்தின் மற்றும் மாகாண சபைகளின் செலவினத் தலைப்புக்குரிய மாதாந்தக் கணக்கு விபரங்களை பரிசீலனை செய்து, போதியளவு ஏற்பாடு இன்றி செலவு விடயங்களுக்குச் செய்யப்பட்ட வரவு வைத்தல்கள் இருப்பின் அவற்றை உடனடியாக திருத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 குறைநிரப்பு கணக்குச் சுருக்கத்தின் மூலம் ஏனைய அமைச்சொன்றில்/ திணைக்களமொன்றில்/ மாவட்டச் செயலகமொன்றில் மற்றும் மாகாண சபையொன்றில் கணக்குகளுக்குரிய பதிவுகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அதற்காக குறிப்பிட்ட அமைச்சின்/ திணைக்களத்தின்/ செயலகத்தின் மற்றும் மாகாண சபையின் முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.3 தொடர்புடைய அமைச்சின்/ திணைக்களத்தின்/ மாவட்டச் செயலகத்தின் மற்றும் மாகாண சபைகளின் சிகாஸ் (CIGAS) நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அந்த கணக்குக் குறிப்புகளை திருத்திக்கொள்வது நடைமுறைச் சாத்தியமற்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் பிழையான கணக்கு வைப்புக்களை திருத்திக்கொள்வதற்காக திறைசேரிக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறான சரிசெய்தலுக்காக இந்தத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்ற பேரேட்டுக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் உண்மைத் தன்மை சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படும்.

3.4 2024 ஆம் ஆண்டுக்காக அந்தந்த அமைச்சுக்குரிய இறுதித் திறைசேரி கணக்கு கூற்றை இந்தத் திணைக்களத்தின் https://newcigas.treasury.gov.lk இணையத் தளத்தில் வெளியிடப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டிற்கான இறுதி நிதிக் கூற்றுக்களை இவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட திறைசேரிக் கணக்குக் கூற்றுக்களின் தகவல்களின் பிராகாரம் மாத்திரமே தாயரித்தல் வேண்டும் என விசேடமாக வலியுறுத்தப்படுகின்றது.

3.5 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் யாதேனும் ஒரு அமைச்சு, திணைக்களம் அல்லது மாவட்டச் செயலகம் ஒன்றினால் வேறு அரசாங்க அல்லது தனியார் நிறுவனம் ஒன்றிடம் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றிருப்பின், அது தொடர்பான பற்றுச் சீட்டுக்களை 2024 டிசம்பர் மாதம்

31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தீர்த்து கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 நிதி ஒழுங்குவிதி 215(3)(இ) இன் பிரகாரம் செலவினத் தலைப்புகளின் ஆண்டிறுதி மீதி ஏற்பாடுகளை வைப்புக் கணக்கிற்கு மாற்றுவதற்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திலிருந்து அதற்குரிய அனுமதி கிடைக்கப் பெற்றிருந்தால் மாத்திரமே மாற்றமுடியும். அவ்வாறு அனுமதி கிடைக்கப்பெற்ற மீதி ஏற்பாடுகளை மாற்றுவதற்காக புதிய வைப்பு கணக்கு இலக்கமொன்று உப கணக்காக அரச கணக்குகள் திணைக்களத்தினால் 2024 ஆம் ஆண்டிற்காக தொடர்புடைய நிறுவனத்திற்கு வழங்கப்படும். அதனால் எக்காரணம் கொண்டும் தற்போது பேணி வரப்படுகின்ற முன்னைய ஆண்டுக்குரிய வரவுசெலவு ஏற்பாடுகள் மாற்றப்பட்டுள்ள வைப்புக் கணக்குகளுக்கோ அல்லது ஏனைய வைப்புக் கணக்குகளுக்கோ 2024 ஆம் ஆண்டிற்குரிய நிதி ஏற்பாடுகளை மாற்றம் செய்யக் கூடாது. மேற்படி வேண்டுகோள்களை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கும் போது உரிய செலவினத் தலைப்பின் போதிய ஏற்பாடுகள் உள்ளனவா என்பது பற்றி உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

3.7 கணக்குகளைத் தீர்க்கும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அமைச்சின்/ திணைக்களத்தின்/ மாவட்டச் செயலகத்தின் மற்றும் மாகாண சபைகளின் புத்தகங்களில் காட்டப்படுகின்ற சகல கணக்குகளையும் 2024 ஆம் ஆண்டின் இறுதித் திறைசேரிக் கணக்கு கூற்றுகளின் கணக்குத் தகவல்களுடன் சீராக்கம் செய்து முரண்பாடுகள் இல்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

3.8 நிதி அல்லாத சொத்துக்களின் கணக்குரீதியான சரியானதன்மையைப் பேணிவருவது தொடர்புடைய அமைச்சின்/ திணைக்களத்தின்/ மாவட்டச் செயலகத்தின் பொறுப்பாக இருக்கின்ற அதேவேளையில் நிறுவனத்தின் புத்தகங்களில் காணப்படுகின்ற நிலுவைகள் எப்போதும் திறைசேரி கணக்கு கூற்றில் சொத்து பேரேட்டு நிலுவைகளுடனும் தனிக் கணக்கு நிலுவைகளுக்கும் சமனாக இருத்தல் வேண்டும்.

3.9 அரசு கணக்குகள் திணைக்களத்தினால் கீழே 04 ஆம் பந்தியில் காணப்படுகின்ற திகதிகளுக்கு அமைவாக திறைசேரி கணக்குக் கூற்றுக்கள் வெளியிடப்படுகின்றபடியினால், உரிய கால எல்லைக்குள் இறுதி கணக்கு சுருக்கங்களையும் குறைநிரப்பு கணக்கு சுருக்கங்களையும் சமர்ப்பிப்பது தொடர்புடைய தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரது பொறுப்பாகும். அவ்வாறு உரிய தினத்திற்கு தொடர்புடைய கணக்கு சுருக்கங்களையும் தொடர்புடைய ஏனைய கணக்கு அறிக்கைகளையும் சமர்ப்பிக்காத நிறுவனங்களில் செலவுகள் இறுதி திறைசேரி கணக்கு கூற்றுகளில் மூலம் வெளிப்படமாட்டாது. அவ்வாறு இறுதி திறைசேரி கணக்குகளின் மூலம் சரியான நிதி நிலைமைகள் வெளிப்படுத்தாமை பற்றி கணக்காய்வு விசாரணைகளுக்கு உட்படுவதனைத் தவிர்ப்பதற்காக உரிய கால எல்லைக்குள் தமது செலவினத் தலைப்பில் சகல செலவினங்களையும் திறைசேரிக்கு அறிக்கையிடுவதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள்/ கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்தல் வேண்டும்.

4. 2024 ஆம் நிதியாண்டின் கணக்குகளைத் தீர்க்கும் பணிக்கான எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள்

| தொடர் இலக்கம் | விடயம் | பணி தொடர்பான தெளிவுபடுத்தல்கள் | பணியினைப் பூர்த்தி செய்ய வேண்டிய குறிப்பான இறுதித் திகதிகள் |
|---|---|---|---|
| 4.1 | 2024 ஆம் ஆண்டின் காசுப் புத்தகத்தைத் தீர்த்தல் | காசுப் புத்தகங்களை மூடுவது திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று |
| 4.2 | 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குரிய கணக்குச் சுருக்கங்களை சமர்ப்பித்தல். | 2024 டிசம்பர் மாதத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கிய கணக்கு சுருக்கங்களை சமர்பித்தல் வேண்டும். | அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 01/ 2024 க்கு இணங்க முதலாம் மற்றும் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதிக்கு முன்னர் |
| 4.3 | 2024 டிசம்பர் மாதத்திற்கான திறைசேரி கணக்கு கூற்றுக்களை வெளியிடுதல் | 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் கணக்குச் சுருக்கத்தில் உள்ளடங்கி இருக்கின்ற கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கிய திறைசேரிக் கணக்குக் கூற்றுக்கள் திறைசேரியின் இணையத் தளமாகிய https://newcigas.treasury.gov.lk இன் தளப் பக்கத்தில் வெளியிடப்படும். | 2025 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதியன்று |
| 4.4 | முதலாவது குறைநிரப்புக் கணக்கு சுருக்கத்தை சமர்ப்பித்தல் | 2024 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தின் கணக்குச் சுருக்கத்தை உள்ளடக்குவதற்கு முடியாமல் போன கொடுக்கல் வாங்கலை மாத்திரம் உள்ளடக்கி "முதலாவது குறைநிரப்புக் கணக்கு சுருக்கம்" சமர்ப்பித்தல் வேண்டும். இங்கு CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான மாத இறுதி செயல்முறை (Month end process) பூர்த்தியடைந்த பின்னர் மாத்திரம் முதலாவது குறைநிரப்புக் கணக்கு சுருக்கத்தை சமர்ப்பித்தல் வேண்டும். | 2025 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |

அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம், நிதி அமைச்சு
செயலகம், கொழும்பு 01, இலங்கை
தொ.பே. - 94 11 2484728 /தொலை நகல் - 94 11 2473856 / மின்னஞ்சல் - dgsa@sad.treasury.gov.lk

| | | | |
|---|---|---|---|
| 4.5 | நிதியல்லா சொத்துக்களை அறிக்கையிடல் | CIGAS நிகழ்ச்சித் திட்டத்தினால் அனைத்து நிதியல்லா சொத்துக்களுக்காக தயாரிக்கப்பட்ட சொத்து கோவை (CSV File) ஆனது அரச கணக்குகள் திணைக்களத்திற்கு கீழ் தரப்பட்ட மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். cigassummary@sad.treasury.gov.lk.<br><br>(i) உப காரியாலயங்கள் காணப்படுமாயின் அவற்றிக்கான தரவுகள் ஒருங்கிணைக்கப்பட்ட CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவு செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட சொத்து கோவை உருவாக்கப்பட வேண்டும்.<br>(ii) இச்சொத்து கோவையானது அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதன் முன் தலைமை காரியாலயங்கள் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் காணப்படும் கட்டுப்பாட்டு பேரேடு கணக்குகள் மீதிகள்<br><br>(Cash → Ledger → Show Accounts → Accounts Summary→Assets)<br><br>CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உருவாக்கப்படும் Final Account Assets Report ( cash→ Final Acct→ Asset_ Rpt_ Current Year) ற்கு இணங்க வேண்டும்<br><br>(iii) CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் காணப்படும் கட்டுப்பாட்டு பேரேடு கணக்குகள் மீதிகள் திறைசேரி கணக்கு கூற்றில் சொத்து பேரேட்டு நிலுவைகளுடனும் இணங்க வேண்டும் | 2025 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |

| | | | |
|---|---|---|---|
| | | சொத்து கோவையினது உண்மைத்தன்மையினை (i), (ii) மற்றும் (iii) இணங்க உறுதிப்படுத்தியதற்கு பின்னரே அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும்.<br><br>நிதிச்சொத்துகளுக்கான அறிக்கையின் வன் பிரதியை அரச கணக்குத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை. | |
| 4.6 | **முதலாவது குறைநிரப்புக் கணக்குச் சுருக்க தகவல்களையும் உள்ளடக்கிய முதலாவது குறைநிரப்பு திறைசேரிக் கணக்குக் கூற்றுக்களை வெளியிடுதல்.** | 2024 டிசம்பர் மாதம் முதலாவது கணக்குச் சுருக்கத்தையும் முதலாவது குறைநிரப்புக் கணக்கு சுருக்கத்தையும் அறிக்கையிடப்பட்ட சகல பெறுகைகளையும் கொடுப்பனவுகளையும் பிழைகள் சரிசெய்யப்படுதல் உள்ளடங்கிய முதலாவது குறைநிரப்புக் கணக்கு கூற்றுக்கள் திறைசேரியின் இணையத் தளமாகிய https://newcigas.treasury.gov.lk இன் பக்கத்தில் வெளியிடப்படும். | **2025 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் திகதி** |
| 4.7 | **இரண்டாவது மற்றும் இறுதி திறைசேரிக் கணக்குக் கூற்றுக்களை வெளியிட முன்னர் நிதி ஒழுங்குவிதி 69 விண்ணப்பப் படிவம் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்** | நிதி ஒழுங்குவிதி 69 விண்ணப்பப் படிவங்களுக்கான தேசிய வரவுசெலவுத் திட்டத்திணைக்களத்தின் அனுமதியை ITMIS ஊடாக பெற்றுக்கொள்ள வேண்டும் | **2025 ஆம் ஆண்டு சனவரி 29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** |

| | | | |
|---|---|---|---|
| 4.8 | பொறுப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகள் சம்பந்தப்பட்ட விபரங்களை சிகாஸ் செயலியில் பதிவேற்றம் செய்தல் | ஒவ்வொரு செவலினத் தலைப்பினாலும் நி.ஒ. 94(1) இற்கு இணங்கியதாக புதிய சிகாஸ் இணையத்தள செயலிக்கு பதிவேற்றம் செய்யப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய அறிக்கையொன்று முதலாவது திறைசேரி கணக்குக் கூற்றுக்களுடன் வெளியிடப்படுகின்றது. கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய சீராக்கங்கள் இருப்பின் அந்த சீராக்கங்களை மேற்கொண்டு முதலாவது குறைநிரப்புக் கணக்குச் சுருக்கத்தின் மூலம் அறிக்கையிடுதல் வேண்டும்.<br><br>கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய அறிக்கையின் வன் / மென் பிரதியை அரச கணக்குத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை. | 2025 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |
| 4.9 | தொடர்ந்தும் கணக்குகளில் உள்ள பிழை திருத்தத்தை உள்ளடக்கிய இரண்டாவது மற்றும் இறுதி குறைநிரப்புக் கணக்குச் சுருக்கத்தை அரச கணக்குகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் | 2024 ஆம் வருடத்திற்கு உரிய சகல சரிசெய்தல்களும் CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளடக்கி இரண்டாவது மற்றும் இறுதி குறைநிரப்புக் கணக்குச் சுருக்கம் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். | 2025 ஜனவரி 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |
| 4.10 | இரண்டாவது குறைநிரப்பு திறைசேரிக் கணக்கு கூற்றுக்களை வெளியிடுதல் | இரண்டாவது மற்றும் இறுதி குறைநிரப்புக் கணக்குச் சுருக்கத்தின் உள்ளடக்கப்பட்ட திருத்தங்கள் மற்றும் நிதி ஒழுங்கு விதி 69 இற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட மாற்றுதல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய இரண்டாவது குறைநிரப்பு திறைசேரிக் கணக்குக் கூற்றுகள் வெளியிடப்படும். | 2025 பெப்ரவரி 05 ஆம் திகதி |

| | | | |
|---|---|---|---|
| 4.11 | திறைசேரி செயற்பாடுகள், தபால், உள்நாட்டு இறைவரி, சுங்கம், புகையிரதம், அரசாங்க தொழில்முயற்சி ஆகிய திணைக்களங்கள் பேரேட்டுக் குறிப்புகளை சமர்ப்பித்தல் | மேற்குறிப்பிட்ட இரண்டாவது குறைநிரப்பு திறைசேரிக் கணக்குக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் தேவையான பேரேட்டுக் குறிப்புகளை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல். | 2025 பெப்ரவரி 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |
| 4.12 | 2024 ஆம் ஆண்டுக்கான இறுதி திறைசேரி கணக்குக் கூற்றுக்களை வெளியிடுதல் | அடையாளம் காணப்பட்ட சகல கணக்குகளைகளையும் சரிசெய்தல் மற்றும் கணக்குகள் தொடர்பான மாற்றல்களுக்கான பேரேட்டுக் குறிப்புகளை உள்ளடக்கிய இறுதிக் கணக்கு கூற்றுக்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்தக் கணக்குக் கூற்றுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக அதில் 3.4 ஆம் பந்தியின் அறிவுரைகளுக்கு அமைவாக செயற்படுதல் வேண்டும். | 2025 பெப்ரவரி 07 ஆம் திகதி |
| 4.13 | முற்பணக் கணக்கு | சகல முற்பணக் கணக்குகளிலும் முதல் பிரதியை கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அதேவேளையில் அவற்றின் பிரதிகள் அரச கணக்குகள் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.<br><br>நி.ஒ. 506(ஈ) இன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 03/2023 இன்படி தயாரிக்கப்படுகின்ற அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண “பீ” கணக்குகளின் வருடாந்த சீராக்கக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது வன்பிரதிக்கு மேலதிகமாக மென் பிரதியை loaninfor@sad.treasury.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். | 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி **28** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |

5. அதன் பிரகாரம், சகல அமைச்சுக்களும் திணைக்களங்களும் மற்றும் மாவட்டச் செயலகங்களும் இந்த வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

6. இந்த வழிகாட்டல் தொடர்பாக மேலும் விளக்கங்கள் தேவைப்படும் பட்சத்தில் அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் (நிதி அறிக்கையிடல்) தொலைபேசி இலக்கம் 011-2484733, பணிப்பாளர் (அரச நிதிப் புள்ளிவிபரம் மற்றும் முகாமைத்துவத் தகவல்) தொலைபேசி இலக்கம் 011-2484649, பணிப்பாளர் (ITMIS) தொலைபேசி இலக்கம் 0112484765 பணிப்பாளர் (தொகுதி அபிவிருத்தி, பயிற்சி) தொலைபேசி இலக்கம் 011-2484826, பணிப்பாளர் ( சம்பள மென்பொருள் முகாமைத்துவம்) தொலைபேசி இலக்கம் 011-2034516 என்பவற்றின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

ஒப்பம்: டபிள்யு.ஏ. சமன்த உபனந்த

பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. கணக்காய்வாளர் நாயகம்
2. பணிப்பாளர் நாயகம் - திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
3. பணிப்பாளர் நாயகம்- தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
4. பணிப்பாளர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி